# Embassy of Japan

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
TEL: 94-11-269-3831~3, FAX: 94-11-269-8629
E-mail: cultujpn@co.mofa.go.jp /www.lk.emb-japan.go.jp

**PRESS RELEASE**

மார்ச் 7, 2013

**ஜப்பான் மன்னாரில் மீன்பிடி செயற்திட்டமொன்றிற்காக ரூ.8.2 மில்லியன் ரூபாவை NAQDA நிறுவனத்திற்கு வழங்குகிறது**

மன்னார் மாவட்டத்தில் உணவு பாதுகாப்புடன் கூடிய வருமானமீட்டும் செயற்திட்டத்திற்காக ஜப்பானிய அரசாங்கம் 65,735 US டொலர்களை (அண்ணளவாக 8.2 மில்லியன் ரூபாவை) நன்கொடை உதவியாக அடிமட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடைத்திட்டத்தின் கீழ் வழங்கியிருக்கிறது.

“மன்னாரில் நன்னீர் நீரியல் வளத்தை மேம்படுத்தும் செயறத்திட்டதிட்டமானது” பத்து களிமண் தடாகங்கள் உள்ளடங்கிய மீனினவிருத்தி நிலையம், வண்டல தடாகம்,, தண்ணீர் வழங்குவற்கும் அகற்றுவதற்குமான கால்வாய்கள், ஒரு சேவை வழங்கல்கட்டிடம அமைக்கவும் நீரியல் வளம், மறறும் நன்னீர் மீன் பிடித்தலுக்கு தேவையான பயிற்சி வழங்குவதற்கு அவசியமான உபகரணங்கள் வழங்கவும் உதவும். தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையினால் அமுல்ப்படுத்தப்படும் இச்செயற்த்திட்டதின் மூலம் மன்னார் மாவடடமத்தின் சிரிக்குளம் கிராமத்தில் அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் உணவு பாதுகாப்பையும் மற்றும் வருமானமீட்டலலையும் அதிகரிக்க பங்களிப்புச் செய்யப்படும்.

இந்த சிறிய மீனின விருத்தி நிலையம் வருடமொன்றிற்கு 2 மில்லியன் மீன் குஞ்சுகளை உறபத்தி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. இவ்வாறு உறபத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் மன்னார் மாவடடத்திலுள்ள கட்டுக்கரைக் குளத்திலும் மற்றைய குளங்களிலும் விடப்படும். இச்செயற்திட்டத்தின் மூலம் 108 மீனவ சங்கங்களின் உறுப்பினர்கள் நேரடியாக பயனடைவதுடன் மன்னார் மாவடடத்திலுள்ள 70000 மீனவர்கள் மறைமுகமாகவும் பயனடைவர்

இந்நன்கொடை தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் திரு. நொபுஹிதொ ஹொபொ மற்றும் தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் திரு. நிமல் சந்திரரத்ன ஆகியோருக்கிடையே நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் ரஜீவ விஜேசிங்க முன்னிலையில் கொழும்பிலுளள ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் மார்ச் 7ஆம் 2013 அன்று கைச்சாத்திடப்பட்டது.

************************************************************************

Please contact the Economic Cooperation Section of the Embassy for further information, Tel: 011-269-3831-3 (Ext.225) Email:cultujpn@sltnet.lk